**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 26.06.2025**
**OS. No. 260/2015**
**வழக்கு சாட்சி PW.2–ராம்குமார் , த/பெ.சுதர்ஷனம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

21) தாவா சொத்திற்கு யார் கந்தாயம் செலுத்தி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண் என்னவென்றும், அது யார் பெயரில் உள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராஜா என்பவருக்கு சொத்தை 1983ம வருடம் விற்பனை செய்தார்கள். நான் அந்த கிரையப்பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை.

22) அந்த கிரையப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனாஎ ன்னறால் இல்லை. அதில் என்ன சக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நல்லதம்பிக்கு சொத்தை என் தாயார் எந்த வருடம் விற்றார் என்றால் 1990ம் வருடம் விற்றார். அந்த சொத்தின் பட்டா எண் என்னவென்றும், அது யார் பெயரில் உள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அந்த கிரையப்பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை, என் தங்கை சுசீலா கையொப்பம் செய்தார். அவர் கையொப்பம் செய்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த கிரையப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதில் என்ன சக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி பெயரிலுள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தில் என்ன பட்டா எண், என்ன சர்வே எண், என்ன சக்குபந்தி குறிப்பிட்டுள்ளது என தெரியுமா என்றால் தெரியாது.

23) எனக்கு வழக்கு சொத்து குறித்த நிலை, அதை யார் அனுபவித்தார்கள், அதை யார் ரத்து செய்தார்கள், எதன் அடிப்படையில் ரத்து செய்தார்கள், அந்த ரத்து பத்திரம் அமலுக்கு வந்து யார் அனுபவம் செய்து வந்தார்கள் போன்ற எந்த சங்கதியும் தெரியாமல்,

வாதி என் மாமன் மகள் என்பதால் அவர் அழைத்ததன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.